**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 03.10.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உணவு இழப்பு மற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு தினம்

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உணவு பதன் செய் பொறியியல் துறையால் நிறுவப்பட்ட உணவுக்கழகத்தின் முன்னிலையில் சர்வதேச உணவு இழப்பு மற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு தினம் 29.09.2024 அன்று நடைபெற்றது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் காலநிலை மாற்றத்தைக் கணித்தல் போன்ற அழுத்தமான சவால்களைச் சமாளிக்க முதலீட்டின் அவசரத் தேவையைக் குறிக்கும் வகையில், "உணவு இழப்பு மற்றும் கழிவுகளைக் குறைப்பதற்கான கால நிலை நிதி" என்பது இந்த ஆண்டிற்கான கருப் பொருளாகும். விழிப்புணர்வு பேரணி, வினாடி– வினா, சுவரொட்டி வழங்குதல், மீம் உருவாக்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டன. விழிப்புணர்வு பேரணியை துணைவேந்தர் முனைவர்.V.கீதாலட்சுமி, முனைவர்.A.ரவிராஜ், முதன்மையர் (வேளாண்பொறியியல்), முனைவர்.N.மரகதம், முதன்மையர் (மாணவர்நலன்), முனைவர் M.பாலகிருஷ்ணன் பேராசிரியர் மற்றும் தலைவர் கொடியசைத்து துவக்கிவைத்தனர். உணவுப்பதப்படுத்துதல் துறைத்தலைவர், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு உணவு இழப்பு மற்றும் கழிவுத்தடுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

விழிப்புணர்வுபேரணியில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய சுமார் 600 பேர்கலந்து கொண்டு, முழக்கங்களை எழுப்பினர். உணவு இழப்பு மற்றும் கழிவுகளைத்தடுப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பது இப்பேரணியின் மையக்கருத்தாகும்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***